# உள்ளத்தில் உண்மையுள்ளவன்.

நீதிமொழிகள் 28:20ல் உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான். இன்றைக்கு ஊழியங்களிலும் தனிப்பட்ட ஜீவிதத்திலும் உண்மையும் உத்தமமும் இல்லாததால் நாம் தேவனிடமிருந்து முழுமையான ஆசீவாதங்களை பெற்று கொள்ளவில்லை மேலும் நேர்மையாய் நடப்பவர்கள் மாத்திரமே மறுமைக்கான ஆசீவாதங்களை பெற்று கொள்வார்கள் என்று வேதம் சொல்கிறது.
ஏசாயா 57:2 நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து, தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள். சங்கீதம் 51:6ல் இதோ உள்ளத்தில் உண்மையாயிருக்க விரும்புகிறீர் என்று வேதம் சொல்கிறது.உள்ளத்தில் அதாவது இருதயத்தின் ஆழத்தின் உள்ள உண்மையுடன் கூடிய நேர்மையான தன்மையே நம் நடக்கைகளிலும் பேச்சிலும் வெளிப்பட வேண்டும்.
சங்கீதம் 19:14 என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக. இன்றைக்கு நம் இருதயத்தின் காரியங்களும் அதன் நிறைவால் வரும் நம் நடக்கைகளும் செயல்களும் தேவனுக்கு பிரியமாயிருக்கிறதா? தேவன் நம் இருதயங்களை ஆராய்ந்து அறிகிறார். நம்முடைய இருதயத்தில் உள்ளான மாயமாலமான உண்மையற்ற நிலை மனுஷருக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் தேவனோ நம் உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிகிறார் என்பதில் எச்சரிக்கையாக இருப்போம்.

யோவான் 2:25 தன்னை நோக்கி வந்த நாத்தான்வேலை பார்த்து இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்று தேவன் சாட்சி கொடுக்கிறார். நீங்கள் நடப்பதில், பேசுவதில், நினைப்பதில் உண்மையுள்ளவர்களாக இருக்க தேவன் விரும்புகிறார்.
இன்றைக்கு அநேகர் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் உண்மையற்ற நிலையிலே காணப்படுகிறார்கள் கணவன் மனைவிக்குள் உண்மை இல்லை. பெற்றோர் பிள்ளைகள் மற்றும் உடன் பிறந்தவர்களுக்குள் உண்மையில்லை. வேலைக்காரன் எஜமானிடமும் எஜமான் வேலைக்காரரிடமும் உண்மையற்ற நேர்மையற்ற நிலையிலே இருக்கிறார்கள். தேவனுக்கு ஊழியம் செய்கிற ஊழியக்காரர்கள் கூட தேவனுக்கு முன்பாக உண்மையற்ற நிலையிலே காணப்படுகிறார்கள் இவர்கள் ஏராளமான பொய்களை சொல்கிறார்கள்.
கபடு செய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை. பொய் சொல்லுகிறவன் என் கண் முன்னே நிலைப்பதில்லை (சங்கீதம் 101:7) என்று கர்த்தர் சொல்கிறார்.

சகரியா 8:16-17 நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் என்னவென்றால் அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள் உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள். ஒருவனும் பிறனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும் பொய்யாணையின் மேல் பிரியப்படாமலும் இருங்கள் இவைகளெல்லாம் நான் வெறுக்கிற காரியங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் இதற்க்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் மத்தேயு 5:37. என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்னார். ஒரு நாளைக்கு நாம் எத்தனை பொய் சொல்கிறோம் என்று உங்களை ஆராய்ந்து பாருங்கள். நாம் பேசிய வீணான வார்த்தைகளை குறித்து நியாயதீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று ஆண்டவர் சொன்னார்.
லேவியராகமம் 19:11 நீங்கள் களவுசெய்யாமலும், வஞ்சனைபண்ணாமலும், ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள். பொய் உதடுகள் கர்த்தருக்கு

அருவருப்பானவைகள் உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்கு பிரியம் நீதிமொழிகள் 12:22 என்று வேதம் சொல்கிறது. பொய் பேசுகிறவர்கள் அழிந்து போவார்கள் என்று சங்கீதம் 5:6ல் பார்க்கலாம்.

இன்றைக்கு நாம் பணத்துக்காகவும் பொருளுக்காகவும் அநேக பொய்களை சொல்கிறோம். அது நமக்கு சாபத்தையே கொண்டுவரும். சமீபத்தில் ஒரு சகோதரர் தன் காரை விற்பதற்க்காக விளம்பரம் செய்திருந்தார்.ஆக்சிடென்ட் ஆகாத கார், டயர்கள் எல்லாம் புதியது என்று சொல்லியிருந்தார்கள். அவர் ஒரு நல்ல சபைக்கு போவதால் அதை பார்த்த ஒருவர் நான் வாங்கி கொள்கிறேன் என்று rate எல்லாம் பேசி முடித்து விட்டார். அவர்கள் ஆலயத்துக்கு போவதால் எல்லா தகவல்களும் உண்மையாயிருக்கும் எனவே காரை பரிசோதிக்க தேவையில்லை என்று சொல்லிவிட்டார். ஆனால் காரை வாங்கிய பிறகு அவர்கள் சொன்ன தகவல்கள் உண்மைக்கு முரணாக இருந்தது. 5 வருடங்களுக்கு முந்தய டயர்கள் மேலும் அந்த கார் விபத்துக்குள்ளாகியிருந்ததையும் மறைத்திருந்தார்கள். தன் காரை அதிக விலைக்கு விற்ப்பதற்க்காக ஏராளமான பொய்களை சொல்லி அதை சாதித்தும் விட்டார்கள். இதனால் வர கூடிய நஷ்டத்தின் விளைவுகளும் பாவத்தின் பலன்களும் சாபமாக இவர்கள் வாழ்க்கையிலோ அல்லது இவர்கள் பிள்ளைகளுடைய வாழ்க்கையிலோ சரிக்கட்டப்படும் என்பதை அறியாமல் போகிறார்கள்.

லூக்கா 16:11-12 அநீதியான உலகப்பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால் உங்களுக்கு யாதொன்றையும் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?
இன்றைக்கு தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்படியாமல் பணத்தை இச்சித்து அதற்காக பொய் வழிகள் தேடுகிறவர்கள் பொய்யர்களாக இருக்கிறார்கள். பொய்யர்கள் பரலோக ராஜ்யத்திலே பிரவேசிப்பதில்லை என்று வேதம் சொல்கிறது

இன்றைக்கு தொழில் செய்து கொண்டே ஊழியம் செய்கிற அநேகர் தங்கள் தொழிலிலும் தங்கள் நடக்கைகளிலும் உண்மையாக இருப்பதில்லை. தங்கள் வேலைக்காரர்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்காமல் பொய் சொல்லி ஏமாற்றுகிறார்கள். ஊழியத்திலும் கூட பொய் சொல்லுகிற இவர்கள் மாயமாலமான பிரசங்கிகள். இவர்கள் தங்கள் விசிவாசிகளை கூட பொய்யர்களாகவே வைத்திருக்கிறார்கள்.இவர்கள் சத்தியத்தின் படி நடப்பதில்லை தங்கள் சபையினரையும் சத்தியத்தின் படி நடத்துவதில்லை இவர்கள் சத்தியத்தின்படி நடத்தபட்டால் தான் இவர்களும் தங்கள் விசுவாசிகளை சத்தியத்தின் படி நடத்துவார்கள். இவர்களை தான் ஆண்டவர் குருடருக்கு வழிகாட்டும் குருடர்களாக பார்க்கிறார்.

மத்தேயு 25:21 அவனுடைய எஜமான் அவனை நோக்கி நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய் அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.
லூக்கா 16:10 கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்.

இன்றைக்கு நமக்கு கொடுக்கப்பட்ட வேலை குடும்பம், ஊழியம் போன்ற கொஞ்ச காரியங்களில் உண்மையுள்ளவர்களாயிருந்தால் மாத்திரமே அவர் சந்தோஷத்துக்குள் பிரவேசிக்க முடியும் என்பதில் ஜாக்கிரதையாக இருப்போம். ஏனென்றால் வெளிப்படுத்தின விசேஷம் 17:14ல் ஆண்டவரோடு இருப்பவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளபட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்பது நிச்சயம். எசேக்கியா ராஜா மரணப்படுக்கையில் இருந்த போது தேவனை நோக்கி நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து உம் பார்வைக்கு நலமானதை செய்தேன் என்பதை நினைத்தருளும் (2 இராஜா 20:3) என்று விண்ணப்பம் பண்ணினான். தேவன் அவனுக்கு பதில் கொடுத்தார். நம்மில் எத்தனை பேர் தேவனுக்கு முன்பாக உண்மையும் உத்தமுமாக வாழ்கிறோம்.கேயாசியை போல பணத்தை இச்சித்து பொய் சொல்லி  தேவனுடைய ஊழியத்தை செய்வீர்கள் என்றால் அதன் மூலம் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளும் சாபம் தான் வரும். மோசேயை குறித்து ஆண்டவர் என் தாசனாகிய மோசே என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் என்று சாட்சி கொடுத்தார் எண்ணாகமம் 12:7. நான் உண்மையுள்ளவனாயிருப்பதால் இந்த ஊழியத்தை எனக்கு கொடுத்தார் என்று பவுல் சொல்கிறார்.

1 தீமோத்தேயு 1:12  என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால் அவரை ஸ்தோத்திரிக்கிறேன்.

பிரியமானவர்களே
உன் எஜமானுடைய அடிச்சுவட்டை பின்பற்றவும், நடக்கவும் அழைக்கப்பட்ட உன் செயல்பாடுகள் எப்படி இருக்கிறது. தேவன் யாரை  முன்னறிந்தாரோ அவர்களை தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாய் இருப்பதற்கு முன் குறித்திருக்கிறார். உன்னை அழைத்த உண்மையுள்ளவரின் சாயலாய் நீ மாறியிருக்கிறாயா?.
1 சாமுவேல் 15:29 இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய் சொல்லுகிறதும் இல்லை, தாம் சொன்னதைப் பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை, மனம் மாற அவர் மனுஷன் அல்ல என்றான்.
இன்றைக்கு அநேகரிடம் காணப்படும் உண்மையற்ற நேர்மையற்ற கபடுள்ள செய்கைகளை பார்க்கும் போது அவர்கள் பிசாசின் அடிச்சுவட்டை இன்றும் பின்பற்றுகிறார்கள். பிசாசை போல மருரூபமடைகிறார்கள் என்பது மிகவும் வருத்தத்துக்குறியாது.
யோவான் 8:44 நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள், உங்கள் பிதாவினுடைய இச்சைகளின் படி செய்ய மனதாயிருக்கிறீர்கள், அவன் ஆதிமுதற் கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை, அவன் பொய்யனும் பொய்யுக்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான். எனவே இன்றைக்கு எல்லா பொய் வழிகளையும் நேர்மையற்ற தன்மையும் விட்டு மனம் திரும்புங்கள் வசனத்தை காத்து கொள்ளுங்கள்.
சங்கீதம் 119:101  உம்முடைய வசனத்தை நான் காத்து நடக்கும்படி, சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன்.
பொய் சொல்ல கூடிய பழைய மனுஷனின் செய்கைகளை விட்டு மனம் திரும்பி இயேசுவின் சாயலாய் மாறுங்கள் புற ஜாதி ஜனங்கள் உங்கள் நேர்மையுள்ள உண்மையுள்ள் கபடற்ற கள்ளமற்ற காரியங்களை பார்த்து தேவனை

மகிமைபடுத்தட்டும். நீங்கள் உலகத்துக்கு உப்பாய் வெளிச்சமாய் இருக்க அழைக்கபட்டிருக்கிறீர்கள்.

கொலோசெயர் 3:9-10 ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள், பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.